# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்

JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 6**

**JUNE 2024 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. jaamakkaran@gmail.com


கர்த்தருக்குள் அன்பானவர்களே! உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.



**அறிவிப்பு**

என்னோடு Email மூலமாக தொடர்பு கொண்டு ஜெபக்குறிப்பு அனுப்பவும், வேத வசன சந்தேகங்கள் கேட்டு அறியவும். இதுவரை jamakaran@yahoo.com என்ற மெயில் மூலமாக தொடர்பு கொண்டீர்கள். yahoo.com மூலமாக செய்திகள் மிக தாமதமாக கிடைப்பதால் இப்போது புதிதாக jaamakkaran@gmail.com என்ற மெயில் அமைத்துக்கொண்டோம்.

yahooவைவிட gmail மிகத் துரிதமாக செய்திகள் வந்து சேருகிறது. ஜாமக்காரன் பத்திரிகையையும் gmail மூலமாக PDFல் துரிதமாக செய்திகளை நீங்கள் பார்க்கலாம். ஆகவே நீங்கள் இந்த jaamakkaran@gmail.comயையும் குறித்து கொண்டு எங்களோடு தொடர்பு கொள்ளலாம். இரண்டு மெயில்களும் எப்போதும் பயன்பாட்டில் இருக்கும். கர்த்தர் செய்த இந்த ஏற்பாட்டிற்கு தேவனை துதிக்கிறேன்.


அடுத்து என் அலுவலகத்தில் பணியாற்றிய **இரண்டு பெண்கள்** நம் அலுவலகத்திலிருந்து முழுவதுமாக விலகிப்போய்விட்டார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

இவர்களுக்கு பதிலாக மிகவும் திறமைபெற்ற **இரண்டு அலுவலர்களை** ஜாமக்காரன் அலுவலகத்தில் இணைந்துள்ளோம். இவர்கள் இருவரும் மிக அதிகம் பயின்றவர்கள். **என் மனைவிக்கு** அலுவலகத்தில் மிகவும் உருதுணையாக இருக்கிறார்கள். இவர்கள் இருவரும் புதிதாக இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டவர்கள். இவர்களுக்காகவும் இவர்கள் பிள்ளைகள் குடும்பத்துக்காகவும் வாசகர்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து நான் ஜெபிக்கிறேன்.

-- **Dr. புஷ்பராஜ்**

## JUNE - 2024

# பரலோக ராஜ்யத்திற்குள் நுழையும் தகுதி



(Late) Prof.
S. பன்னீர்செல்வம்

**பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்குத் தேவையான மூன்று தகுதிகளைப் பற்றி சிந்திப்போம்.**

**முதலாவது தகுதி**

நாம் **மறுபடியும்** பிறக்க வேண்டும். (யோ 3:3) ஆம்! நாம் ஆண்டவருடைய வசனத்தின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் ஆண்டவருடைய ராஜ்யத்தில் குடிமகனாகப் பிறக்க வேண்டும். மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதைக்குறித்து நிக்கொதேமு ஆச்சரியப்பட்டதுபோல நாமும் ஆச்சரியப்படாமல் (யோ 3:7) நம்முடைய **பாவத்தை அறிக்கையிட்டு** மனந்திரும்பி இயேசுவை நமது இருதயத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொயள்ள கால தாமதம் செய்ய வேண்டாம்.

**இரண்டாவது தகுதி**

**நாம் சிறு பிள்ளைகளைப்போல மாறி, தாழ்மையைத்** தரித்துக்கொள்ளவேண்டும் (மத் 18:3,4) பெருமையோடடு இருப்பவர்களுக்கு பரலோகத்தில் இடம் கிடையாது. தரை மட்டும் நம்மைத் தாழ்த்துவோமானால் ஆண்டவர் நம்மை வான பரியந்தம் உயர்த்தி அவருடைய ராஜ்யத்தில் நம்மை ஏற்றுக்கொள்வார். இயேசுவினிடத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம் அவருடைய **மனத்தாழ்மையும் சாந்தமும்** என்பதை நாம் மறக்கக் கூடாது.

## மூன்றாவது தகுதி

**உபத்திரவத்தின் வழிகாகத்தான்** நாம் பரலோக ராஜ்யத்திற்கு கடந்து செல்ல வேண்டும். ஆம்! சிலுவை இல்லையென்றால் நாம் உயர்த்தப்பட முடியாது. இயேசு கிறிஸ்துவும் **உபத்திரவத்தின் மூலமாகத்தான்** அதிபதியாக மாறினார் என்பதை (எபி. 2:10) நாம் மனதில் நிறுத்திக்கொள்வது நல்லது. கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணவேண்டாம். துன்பம் சூழ்கையில் நாம் துவண்டுவிடாமல் ஆண்டவரைத் துதிக்கும் **துதி என்ற யாழ்** எடுத்து அதை வாசித்து இன்புற கற்றுக்கொள்ளவேண்டும்.

தொடர்ந்து பரலோாக ராஜ்யத்தில் சேருவதற்குத் தேவையான இன்னும் சில தகுதிகளை வேதத்தின் வெளிச்சத்தில் இந்த செய்தியில் சந்திப்போம். இந்த உலகத்தில் பல சாம்ராஜ்யங்கள் தோன்றியதை நாம் சரித்திரத்தின் வாயிலாக அறிவோம். **மிகப்பெரிய அரசன் அலெக்சாண்டர்** மூலமாக (கி.மு. 330) பரவிய கிரேக்க சாம்ராஜ்யமும் **அலெக்சாண்டருக்குப் பின்பு** உடைந்து போய் விட்டது. இயேசு பிறந்த காலத்தில் உலக முழுவதும் பரவி இருந்த **ரோம சாம்ராஜ்யமும் உடைந்து** சின்னபின்னமாகியது. இவைகள் மாத்திரமல்ல, **பெர்சிய சாம்ராஜ்யம், மொகலாய சாம்ராஜ்யம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்,** எல்லா **சாம்ராஜ்யங்களும்** மங்கி மறைந்து ஒழிந்து போய்விட்டன. ஆனால் **இயேசு கிறிஸ்து** தனது **ராஜ்யத்தை** இந்த உலகத்தில் அநேக மனித உள்ளங்களில் ஸ்தாபித்திருக்கிறார்.

இதோ பரலோக ராஜ்யம் உங்கள் இருதயங்களில் இருக்கிறது. என்று (லூக் 17:2) கூறுகிறார். **பூலோகத்திலே** பூலேக ராஜ்யததை ஸ்தாபிப்பது அவரது நோக்கமல்ல, (யோ 18:36) ஆனால் இந்தப் **பூலோகத்தில்** பரலோக ராஜ்யத்தை ஸ்தாபிப்பது தான் **இயேசுவின் திட்டம்** என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பரலோக ராஜ்யத்தில் நாம் பிரஜையாக மாறவேண்டுமானால் அதற்கு என்ன தகுதிகள் வேண்டும். என்பதைத்தான் இந்தச் செய்தியில் தொடர்ந்து சிந்திக்கவிருக்கிறோம்.

## 4. விடாமுயற்றி

**அதற்கு இயேசு : கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவன் அல்ல என்றார். (லூக் 9:62)**

இந்த உலகத்தில் எந்தக் காரியத்திலும்வெற்றிபெற வேண்டுமானால் விடாமுற்சியும் தைரியமும் அத்தியாவசியம் என்பதை நாம் அறிவோம் **ஏரையும்** எடுத்துக்கொண்டு **மாட்டையும்** ஓட்டிக்கொண்டு வயலுக்கு வந்துவிட்டான். உழ ஆரம்பித்த பின்புதான் **உழுவது**

**அவ்வளவு சுலபமல்ல** என்பதை உணருகிரேன். உழுவதற்காகத் தன் உடல் பொருள் , ஆவி அனைத்தையும் ஒப்புக்கொடுத்தபின்பு **உல்லாசத்தை** நாடலாமா? நெற்றி வேர்வையை நிலத்தில் சிந்திப் பாடுபடத்தீர்மானம் எடுத்த பின்பு **அத் தீர்மானத்தில்** நிலை தடுமாறுவது சரியா?

ஆம்! நாம் **தேவனுடைய ராஜ்யத்தில்** நுழைவதும் அவ்வளவு சுலபமல்ல, அதன் பாதையில் **பல தடைகள்,** இடையூருகள் இருக்கத்தான் செய்யும். **தாவீது ராஜாவாக** சிங்காசனத்தில் அமருவதற்கு முன்பு **அவன் வனாந்தரத்திலே** பல ஆண்டுகள் நாடோடியைப் போலவும், **நாயைப் போலவும்** அலைந்து திரிந்தான்,

சுவிஷேத்தைப் பிரசங்கம் செய்ததின் நிமித்தம் **பவுல்** எவ்வளவு **பாடுகள்.** வேதனைகள் அனுபவித்தார் **மூன்று முறை** மிலாறுகளால் அடிபட்டார். 195 **முறை** யூதர்களால் **சவுக்கடி** வாங்கினார். ஒருமுறை **சாகும் நிலைமைக்கு கல்லெறி வாங்கினார்**. பல முறை **திருடர்களிடம்** சிக்கி தப்பியிருக்கிறார். பலமுறை **சிறைக்குச் சென்றிருக்கிறார்**. நண்பர்கள் மூலமாக மோசங்கள் வந்துள்ளது. அநேக முறை பிரயாசத்திலும் வருத்தத்திலும் கண் விழிப்பிலும் **நிர்வாணத்திலும்** இருந்திருக்கிறார். **இவ்வளவு பாடுகள்** இடையூருகள் **வேதனைகள்** மத்தியிலும் **பவுல் ஆண்டவருக்காக** பல பெரிய சாதனைகளை அவர் செய்திருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதை வாசிக்கும் கிறிஸ்தவ சகோதரரே இயேசுவை பின்பற்றுகிற காரணத்தினால் **கஷ்டம்** துன்பம் **நீ சந்திக்க நேரும்போது** இப்படிப்பட்ட வாழக்கை எனக்கு வேண்டவே வேண்டாம் என்று உன் மனதில் எண்ணம் ஏற்படுகிதா? **கலப்பை கடினமாக இருக்கிறது** என்று எண்ணி **ஆண்டவரின் வயலில்** உழுவதையும் உழைப்பதையும் **விட்டுவிட்டு** ஓடிவிட நினைக்கிறாயா? கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சம்பவத்தை நீ வாசிப்பாயானால் நிச்சயமாக உன் முடிவை மாற்றிக்கொள்வாய்.

## ஜீவனுள்ள சாட்சி

ஒரு சகோதரன் ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு தனது **கிறிஸ்தவ** வாழ்க்கையில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். **வேதத்தை வாசிப்பதில்** அலாதிப் பிரியம் கொண்டிருந்த **அந்த வாலிபன்** திடீரென ஒரு **குண்டு வெடிப்பில்** எதிர்ப்பாராத விதமாக சிக்கி தனது இரண்டு **கைகளையும்,** இரண்டு **கண்களையும்** பறிகொடுத்து விட்டான். இந்த விதமான பரிதாபமான நிலையில் அவனுக்கு **வேதத்தை** எப்படியாவது வாசிக்க வேண்டுமென ஆவல் ஏற்பட்டது, **இரண்டு கைகளும்** இல்லை. **இரண்டு கண்களும்**

இல்லை. என்ன செய்வது? **குருடர்கள்** தங்களது **கைகளினால் தொட்டு வாசிக்கும்** அச்செழுத்துக்களை வரவழைத்து இதை தன் சரீரத்தில் மிஞ்சியுள்ள உறுப்பாகிய **உதடுகள் மூலமாக வாசிக்கலாம்** என தீர்மானித்தான். அதை வரவழைத்து அதில் தன் உதடுகளை வைத்த போது அவனது உதடுகளின் **நரம்புகளும்** குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டு **உணர்வை இழந்திருப்பதை** உணர்ந்தான். இனிமேல் தன் வாழ்க்கையில் ஆண்டவருடைய வார்த்தையை வாசிக்கவே முடியாது என்ற துக்கத்தோடு அதற்கு விடைகொடுக்கும் நோக்கத்தோடு **அதை தன் நாவினால் முத்தமிட்டான்.** அப்போது தனது **நாவு** இன்னும் **உணர்வை** இழக்கவில்லை என்பதை கண்டுகொண்டான். உடனே தன் **நாவின் மூலமாக** அந்த அச்செழுத்துக்களை வாசிக்கத் தீர்மானித்தான். அது மாத்திரமா இதுவரை அவன் **முழு வேதமாகமத்தையும்** நான்கு முறை **வாசித்திருக்கிறான்** என்று அவன் கூறுகிறான். என்ன **தைரியம்,** என்ன **விடாமுயற்சி,** வேதத்தை **வாசிப்பதில்** எவ்வளவு பிரியம்.

இப்பொழுது சொல்லுங்கள் **இயேசுவைப் பின்பற்றுவதில்** என்ன இடையூறுகள் வரினும் சோர்ந்து **போவீர்களா?** அல்லது வருவது வரட்டும், நடப்பது நடக்கட்டும் – என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே **எல்லாவற்றையும் செய்ய எனக்கு ப் பெலனுண்டு –** என்று கூறி ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓட தீர்மானித்துக்கொள்.

ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க **பாரமான** யாவற்றையும் நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கிற **பாவத்தையும்** தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவரும்மாயிருக்கிற **இயேசுவை மட்டும் நோக்கி** நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபி.12:1)

### 5) மற்றவர்களின் தேவைகளைச் சந்திக்கும் சேவை

அப்போழுது ராஜா வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.

**பசியாயிருந்தேன்** எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள். **தாகமாயிருந்தேன்** என் தாகத்தைத் தீர்த்தீர்கள். **அந்நியனாக** இருந்தேன், என்னை சேர்த்துக்கொண்டீர்கள். **வஸ்திரமில்லாதிருந்தேன்** எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள். **வியாதியாயிருந்தேன்** என்னை விசாரிக்க வந்தீர்கள். (மத் 25:34-36)

**பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு இன்னொரு தகுதி :**

தேவையோடு இருக்கிற ஜனங்களுக்கு நாம் சேவை செய்ய வேண்டும். **நான் ஊழியம் கொள்ள வரவில்லை.** ஊழியம் **செய்யவே வந்தேன்.** என்ற இயேசுவின் வார்த்தைகளை நாம் மனதில் நிறுத்துவது நல்லது.

**சமூக சேவை** சுவிசேஷப் பணியல்ல. ஆனால் **சுவிசேஷப் பணியில்** சமூக சேவை **ஒரு அங்கம்.**

இங்கே இயேசு கூறும் வார்த்தைகளின் சாராம்சம், ஏழை எளியவர்களைப் பராமரிக்க வேண்டும். நம்மிடத்தில் உள்ள எல்லாவற்றையும் மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாவிட்டாலும் **நம்மிடத்தில் தேவைக்கு அதிகமாக இருப்பதையாவது** மற்றவர்களுக்கு பகிர்ந்துகொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிற சொத்து நிலம். புலன் ஆஸ்தி அனைத்தும் நமது சுயநலமான உபயோகத்திற்காக மாத்திரம் ஆண்டவர் கொடுக்கவில்லை. **ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தால்** நமக்கு ஆண்டவர் கொடுத்துள்ள **அனைத்து சொத்துக்களும் ஆஸ்தியும் ஆண்டவருக்குத்தான் சொந்தம்.** சில வருடங்களுக்கு நமது மேற்பார்வைக்கு நம்மிடம் ஒப்படைத்துள்ளார். காகத்தை கவணித்துப் பாருங்கள். அது ஏதாவது ஆகாரத்தைப் பார்த்தவுடன் எல்லாரையும் கா கா என்று கரைந்து கூப்பிட்டு மற்ற காக்காய்களுக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணுகிறது. ஆனால் நாமோ அதற்கு எதிர்மறை, ஆகவே நாம் காகத்திடமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

நம்மில் சிலர் ஆண்டவரே எனக்குத் **தாலந்தைத் தாரும்** என்று ஜெபிக்கிறோம். ஆனால் **வியாதிப்படுக்கையில் இருப்பவர்களைப்போய்** விசாரிப்பதும், **துக்கத்தில்** இருப்பவர்களுக்கு **ஆறுதல் சொல்வதும்** சோர்ந்து போயுள்ளவர்களை **உற்சாகப்படுத்து வதும். தேவன் நமக்கு கொடுத்த ஒரு தாலந்து ஆகும் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.** ஒரு மிஷனெரியின் மகன் மூளை வியாதியால் பாதிக்கப்பட்டதினால் அவனை அவனது பெற்றோர்கள் இரவும் பகலும் அருகில் இருந்து கவனித்து வந்தார்கள். அவர்களிடம் வந்து **உங்கள் மகன் டேவிட்டிற்காக நாங்கள் ஜெபிக்கிறோம்** என்று சொன்னவர்கள ஏராளம். அவர்களுக்கு இவர்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். உண்மைதான் ஆனாலும் **ஒரு சகோதரி அவர்களிடம் வந்து அடுத்த வாரம் எனக்கு விடுமுறை** அந்த நாளில் உங்கள் வீட்டிற்கு வந்து மூளை வளர்ச்சியில்லாத **உங்கள் மகன் டேவிட்டை அன்று முழுவதும் நான் கவனித்துக் கொள்கிறேன்.** நீங்கள் அன்று ஓய்வு

**எடுத்துக்கொள்ளுங்கள்** என்று கூறினார். இப்படிப்பட்ட உதவிகளையும் ஒத்தாசையையும் நாம் மற்றவர்களுக்குச் செய்வதைத்தான் ஆண்டவர் **நான் வியாதியாக இருந்தபோது என்னை விசாரித்தீர்கள்** என்று கூறுகிறார்.

**சி.டி. ஸ்டட்** தனது ஆஸ்திகள் அனைத்தையும் ஆண்டவருடைய பணிக்காக எழுதிக்கொடுத்தார். எல்லாரும் இப்படிப்பட்ட துணிச்சலும், தியாகமும் உடையவர்களாக இருக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இயேசுவின் பாதத்தில் **பரிமள தைலத்தை** உடைத்து ஊற்றிய மரியாளைப்போல. அவள் தன்னால் **இயன்றதை செய்ததுபோல்** நாமும் நம்மால் இயன்ற உதவிகளையும், ஊழியங்களையும் உதாரத்துவமான காணிக்கைகளையும் கொடுக்கவும். **அந்நியரை உபசரிக்வும்,** பசி, பட்டினியால் வாடும் மக்களுக்கு ஆகாரம் கொடுக்கவும் ஜெயிலிலும் ஆஸ்பத்திரியிலும் உள்ளவர்களை விசாரிக்கவும் ஆண்டவரிடத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம். அனாதையாக ஆதரவற்ற குழந்தையாக தண்ணீரில் மிதந்து போன **மோசேயின் அழுகையைக் கேட்டு பார்வோனின் மகளின் இருதயம் இளகி** அந்தக் குழந்தையின்மேல் இறக்கம் பாராட்டினாள் என்பதை நாம் மறக்க வேண்டாம் . **நல்ல சமாரியனின்** அருஞ் செயலையும் அடிச்சுவடையும் பின்பற்றுவோம்.

பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும் துரத்துண்ட சிறுபான்மையானவர்களை வீட்டில் சேர்த்துக்கொள்கிறதும்.. உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் (ஏசா 58:7)

இப்படி பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான். (அப். 20:35)

**6. விசுவாசம்**

என் பிரியமான சகோதரரே கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா ? (யாக் 2:5)

ஆண்டவருடைய ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு **அவரிடத்தில் அன்பு** கூறுவதும் **அவர்மேல் விசுவாசம்** வைப்பதும் – ஒரு தகுதியாக வைத்திருப்பது ஆச்சரியமில்லை.

**விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்** – என்ற வசனம்தான் **மார்ட்டின் லூத்தர்** மனம் மாறக் காரணமாக இருந்தது. விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம் (எபி 11:6) தான் போவது எங்கே என்பதை அறியாமல் இருந்தாலும் விசுவாசத்தினால் தேவன் அழைத்தவுடன் **ஆபிரகாம் எழுந்து** புறப்பட்டார், **கீழ்படிந்தார்.** நம் அனைவருக்கும் விசுவாசத் தகப்பனாக மாறினார். விசுவாசத்தின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தை விட்டு தன் யோசேப்பின் எலும்புகளையும் சமந்துகொண்டு **கானான் தேசத்துக்கு** புறப்பட்டு போனார்கள் என்று தீர்க்கதரிசனமாக உரைத்தார்.

ஆண்டவருடைய அருமையான பிள்ளையே! இயேசு கிறிஸ்துவின் மேல் நீ வைத்திருக்கும் விசுவாசம் சாதாரணமானதல்ல. அது மிகவும் விலையேறப்பட்ட மிகப்பெரிய பொக்கிஷம் என்பதை மறந்துவிடாதே. நான் வேலை பார்த்த பொறியியற் கல்லூரியில் ஒரு புதிய கம்ப்யூட்டர் வாங்கினோம். அதை நீங்கள் உபயோகப்படுத்த விரும்பினால் அதனுடைய மேற்பார்வையாளரிடம் கூறி உங்கள் பெயர் அவர் மூலமாக அதில் பதிவு செய்ய வேண்டும். சிலர் என்ன செய்வார்கள் பெயரை பதிவு செய்யாமலே ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்களது பெயர்கள் மூலமாக அந்தக் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்த முயலுவார்கள். அது பெயர் என்னவென்று கேட்டவுடன் யாராவது ஒரு பெயரை கொடுப்பார்கள். பெயருக்குப் பின்பு Password அனுமதிச் சொல் என்ன ? என்று கேட்கும். அங்கு தான் மாட்டிக்கொள்வார்கள். காரணம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு Password கொடுத்திருப்பார்கள். இந்தக் Password பதிவு செய்தவர் ரகசியமாக வைத்திருப்பார். அது Computers Screenல் வராது . Password தவறாக இருந்தால் நீங்கள் அந்தக் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்த முடியாது.

அதுபோலவே பரலோக ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு ஒரு Password அனுமதி வார்த்தை இருக்குமானால் நிச்சயமாக பரலோகம் செல்லலாம். அந்த Password நிச்சயமாக **இயேசுவின் மேல் நாம் வைத்துள்ள விசுவாசமாகத்தான்** இருக்கும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. ஆனால் அப்படிப்பட்ட விசுவாசத்தை **நாம் கிரியைகள் மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.** ஏனெனில் **கிரியையில்லாத விசுவாசம் செத்தது** என்று வேதம் (யாக் 2:26) கூறுகிறது. சூழ்நிலைகள் நமக்குச் சாதகமாக இருக்கும்போது மாத்திரம் அல்ல. நமது வாழ்க்கையில **கார்மேகம்** மூடும்போதும் **புயல்** வீசும்போதும் ஆண்டவர்மேல் நாம் வைத்திருக்கிற **விசுவாசத்தைத்** தளரவிடக்கூடாது. **அத்திமரம்** துளிர்விடாமல் போனாலும் **ஆட்டு மந்தையில்** ஆடுகள் இல்லாமற் போனாலும் **வயல்களில்** தானியங்கள் விளையாமல் போனாலும் – நான் **கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருக்கிறேன்** என்று **ஆபகூக் தீர்க்க**

தரிசயைப்போல (ஆ 3:17,18) நாமும் நமது இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூரக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆப்பரிக்காவிலுள்ள சகாரா பாலைவனத்தில் சில விசுவாசிகள் சிக்கிக் கொண்டார்களாம். உணவு இல்லாத காரணத்தால் அவர்களில் சிலர் பட்டினியால் சாகப்போகிறோம் என்று அவர்கள் நன்கு அறிந்து கொண்டார்கள். அந்த நிலையில் கூட அவர்கள் அனைவரும் கூடி ஆண்டவரை ஸ்தோதரித்து மகிமைப்படுத்தினார்களாம். (அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் 1500 பேர்களோடு டைட்டானிக் கப்பல் மூழ்கியபோது அதில் நூற்றுக்கணக்கான விசுவாசிகள் Nearer to Thee என்ற பாட்டை பாடிக்கொண்டே கடலுக்குள் மூழ்கினார்களாம் என்ன விசுவாசம். என்ன தைரியம் இப்படிப்பட்ட விசுவாசத்தைத்தான் ஆண்டவர் நமது வாழ்க்கையிலும் எதிர்பார்க்கிறார்.

இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்ள, அதைப் பேணி வளர்க்க நாம் ஆண்டவரிடத்தில் ஒப்புக்கொடுப்போமானால் நிச்சயமாக இயேசு அந்த நூற்றுக்கதிபதியையும் கானானிய ஸ்திரீயையும் பார்த்தபின் இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் இஸ்ரவேலர் மத்தியில் கண்டதில்லை (லூக் 7:9) ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது (மத் 15:28) என்று அவர்களை மெச்சியதுபோல நம்மையும் நிச்சயமாகப் பாராட்டுவார்.

**7. அன்பு**

**பரலோக ராஜ்யத்தில்** நுழைவதற்கு விசுவாசத்தோடு **அன்பும்** தேவை என்பதை யாக் 2:5ல் நாம் வாசிக்கிறோம். **அன்பு** என்ற அருமையான **இந்த மூன்று எழுத்தில்** எவ்வளவு வல்லமை அடங்கியிருக்கிறது. **அன்பே தெய்வம்** என்று சிலர் கூறும் அளவிற்கு அந்த **அன்பு** உன்னதமானது. உயரியது பல ஆண்டுகளுக்கு முன்பு **அன்னை தெரசா** செய்யும் ஊழியத்தின்மேல் பொறமையும் எரிச்சலும் ஆத்திரமும் அடைந்த அரசாங்க மேலதிகாரி ஒருவர் அன்னையின் ஆசிரமத்தில் வேகமாக கோபமாக நுழைந்தாராம். அப்படி நுழைந்த போது அவர் கண்ட காட்சி அவரை ஸ்தம்பித்து நிற்க வைத்தது. அன்னை தெரசா அவர்கள் குஷ்டரோகிகளின் புண்களைக் கழுவி அவர்களை குளிப்பாட்டிக்கொண்டிருந்த காட்சியை கண்டார். ஏழையின் கண்களில் இறைவனைக் காண்கிறேன் என்ற கோட்பாட்டில் **கிறிஸ்துவின் அன்பை – அன்னை தெரசா அவர்கள் செயல் முறையில்** காண்பிப்பதைக் கண்ட பின்பு அந்த அதிகாரி வாயடைத்து செயல் இழந்தவராய் தான் வந்த வழியே திரும்பி போய்விட்டாராம்.

ஆம் ! நாம் வாழும் இந்த உலகத்தில் **மக்கள் அன்பிற்காக** ஏங்கித் தவிக்கிறார்கள். உலகப் பிரசித்திப்பெற்ற ஒரு **சினிமா நடிகை** பெயரும், புகழும் இருப்பினும் **என்னை உண்மையாக நேசிப்பதற்கு** இந்த உலகத்தில் **ஒருவரும் இல்லை.** என்று குறிப்பு **எழுதி வைத்துவிட்டு தற்கொலை** செய்து கொண்டாள். பரிசுத்த ஆவியின் மூலமாக தேவனுடைய அன்பு நமது உள்ளங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. (1 யோ. 4:12,13) அந்த உள்ளங்களிலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஆறாய்பெருக்கெடுத்து ஓடும் என்று வேதம் கூறுகிறது. அநேக முறை நான் அனுபவத்தில் கண்ட ஒரு உண்மை என்ன தெரியுமா? ஒரு கிருஸ்தவனுடைய வாழ்க்கையில் மலையை பேர்க்கும் விசுவாசம் இருக்கலாம். இடி முழக்கத்தைப்போல பிரசங்கிக்கலாம். ஆனால் அவனது வாழ்க்கையின் மூலமாக நேசிக்க முடியாதவர்களை நேசித்து அன்பு செலுத்த சற்றும் தகுதியில்லாதவர்களிடத்தில் அன்பு செலுத்தவும் **கிறிஸ்துவின் அன்பை தனது செய்கையின் மூலமாக** வெளிப்படுத்த தவறிவிடுகிறோம். இங்குதான் கிறிஸ்தவ மார்க்கத்தில் கீறல்களும் கோணலான கோடுகளும் கேடுகளும் காணப்படுகின்றன. அன்பு சகலத்தையும் தாங்கும் சகலத்தையும் சகிக்கும். சினமடையாது தீங்கு நினையாது. நீடிய சாந்தமும் தயவுமுள்ளது நம்முடைய இருதயத்தில் தற்சமயம் குடியிருக்கும் அன்பு இத்தன்மையுடையதா? என்பதை நாம் ஆராய்வது நல்லது.

**கொரியாவில்** யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் கம்பூனிஸ்ட்டின் கலகக்காரர்கள் **ஒரு கிறிஸ்தவரை** கைதுசெய்து கொலை செய்யத் தீர்மானித்தார்கள். ஆனால் அவர் அநேக **அனாதைப் பிள்ளைகளை வளர்க்கிறார்** என்று கேள்விப்பட்டு அவரை உயிரோடு விட்டு விட்டு அவருக்கு பதிலாக **அவரது மகனை** தகப்பன் கண்களுக்கு முன்பாகவே **சுட்டுக் கொல்கிறார்கள்.** சில நாட்கள் கழித்து ஆட்சி மாறியது. இவரது மகனை எவன் கொன்றானோ **அவன் கைது செய்யப்பட்டு** அவனை **கொலை செய்யும்படியாக நீதிபதி உத்தரவிட்டார்,** அப்பொழுது இவர் **நீதிபதியிடம்** சென்று தன் மகனைக்கொன்றவனை மன்னித்து அவனை **தன்னிடம் ஒப்படைக்கும்படியாக மனு கொடுத்தார்.** அந்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு தன் மகனைக் கொன்ற **கொலையாரனை தனது மகனாக வளர்த்தார்.** அவனும் **இரட்சிக்கப் பட்டு** ஒரு அருமையான **போதகராக மாறினான்.** என்ன ஒரு ஆழமான அன்பு ! நமது குடும்பத்தினரில் ஒருவரை யாராவது கொலை செய்திருந்தால் அப்படிப்பட்ட கொலைகாரனை ஒருவேளை **வெறுக்காமல்** இருக்க முடியும். ஆனால் **அவனை நேசிக்க இயலுமா?** அப்படிப்பட்ட உன்னதமான **தெய்வீக அன்பை** ஆண்டவர் நமக்கு அளவில்லாமல் அளிக்கும்படியாகவும் அதற்கு ஏற்றபடி நம்மை பக்குவப்படுத்தும்படியாகவும் அவரிடம் கெஞ்சிக் கேட்போம்.

இப்பொழுது **விசுவாசம் நம்பிக்கை அன்பு** இம்மூன்றும் நிலைத்திருக்கிறது, இவைகளில் **அன்பே பெரிது** (1 கொரி 13:13)

**பரலோக ராஜ்யத்திற்குள்** நுழைவதற்குத் தேவையான **பல தகுதிகளைப்** பற்றி இந்த இரண்டு செய்திகளிலும் சிந்தித்தோம். இதை வாசித்த நாம் ஒவ்வொருவரும் அந்தப் பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்கு **தகுதியுள்ளவர்களாக** இருக்கிறோமா என்ற ஆராய்ந்து பார்ப்பது நல்லது. பரிசுத்த ஆவியின் மூலமாக ஆண்டவருடைய **வசனத்தின்** மூலமாக **மறுபடியும் பிறந்திருக்கிறோமா? இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா?** அப்படி இல்லை என்றால் **இன்றே** இரட்சன்ய நாள். **இப்பொழுதே** அநுக்கிரக காலம். சிறு பிள்ளைகளைப் போல மாறி தாழ்மைமையத் தரித்துக்கொள்வோம். **உபத்திரவத்தின்** மூலமாக **இடுக்கமான** வாசல் வழியாக் பிரவேசிக்க மறந்து கலப்பையின் மேல் கையை வைத்துவிட்டு திரும்பி பார்க்கக்கூடாது **லோத்தின் மனைவியை** போல திரும்பிபார்க்காமல் விடாமுயற்சியோடு முன்னேர லக்கை நோக்கித் தொடருவோம். தேவையோடு நிற்கற மக்களின் தேவைகளைச் சந்தித்து தியாகத்தோடு சேவை செய்யத் தீர்மானிப்போம் . பரலோகத்தில் நுழைவதற்கு தேவையான Password அனுமதிச் சொல்லாகிய **விசுவாசத்தையும்**, எல்லாவற்றிலும் பெரிதான **அன்பையும்** எடுத்துக்கொண்டு ஆண்டவரின் பரலோக ராஜ்யத்தின் **நுழைவாசலுக்கு** நாம் செல்லும்போது ஆண்டவர் நம்மைப் பார்த்து என் பிதாவினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தப்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் **கொள்ளுங்கள் வாருங்கள்** என்று நம்மை வரவேற்பார் என்பதில் சந்தேகமில்லை.

பரலோகமே என் சொந்தமே என்று காண்பேனோ என் இன்ப இயேசுவை என்று காண்பேனோ

சிலுவையில் அறையுண்டேன் இனி நானல்ல இயேசுவே அவரின் மகிமையே எனது இலட்சியமே

இயேசு என் நம்பிகையாம் இந்த பூமியும் சொந்தமல்ல பரிசுத்த சிந்தையுடன் இயேசுசை பின்பற்றுவேன், நல்ல அர்த்தமுள்ள பாடல் வரிகள் இது.

- Late Rev. Prof. S. பன்னீர் செல்வம்

# தேவன் என்னை ஆசீர்வதிக்க நான் எம்மாத்திரம்



Dr. V.C.T. **பிரபுசிங்,**
Principal, **SAIACS,** Bangalore

2024 ம் வருடம் தமிழ்நாடு FMPB மாநில முகாமிற்காக தெரிந்துகொள்ளப்பட்ட கருப்பொருள் **நான் எம்மாத்திரம்** என்பதாகும். தேவன் தாவீதிடம் நான் உன் குமாரனை ஆசிர்வதித்து, அவனுடைய ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன் என்று சொல்லி ஆசீர்வதித்தார் (2 சாமு7:12,13). அதற்கு தாவீது **கர்த்தராகிய ஆண்டவரே** தேவரீர் **என்னை** இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம் ? 2 சாமு 7:18 என்று பணிவோடு அறிக்கையிடுகிறார். பல சாதனைகளை சாதித்த **தாவீதின்** வாழ்வில் **பல ஏற்ற இறக்கங்கள்** இருந்தன. **பல சிகரங்களை** தொட்ட அவர் **பாவத்தின் பாதாளத்தை** நோக்கியும் சென்றார். 2 சாமு 7:1ல் கர்த்தர் ராஜாவைச் சுற்றிலும் இருந்த அவனுடைய எல்லா சத்துருக்களுக்கும் அவனை

நீங்கலாக்கி இளைப்பாரப் பண்ணினபோது அவன் தன்வீட்டிலே வாசமாயிருக்கையில், ராஜா **தீர்க்கதரிசியாகிய நாத்தானை** நோக்கி பாரும், கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே **நான் வாசம்** பண்ணும்போது **தேவனுடைய பெட்டி** திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே ! என்றான் என்று வாசிக்கிறோம். தாவீது தன் விட்டில் **சுகமாக இளைபாறிக்கொண்டிருக்கும் சமயம்** தாவீதின் எண்ணம் எங்கே செல்கிறது பாருங்கள்! நான் விலையுயர்ந்த அழகாய் அலங்கரிக்கப்பட்ட கேதுரு மரத்தாலான வீட்டில் வாசம் பண்ணும் போது என் தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே **கூடாரத்தில்** இருக்கிறதே. நான் என் ஆண்டவருக்கு எப்போது ஒரு ஆலயத்தைக் கட்டப்போகிறேன் என்று ஏங்குகிறார். தேவன் நம் கஷ்டங்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி நம் தேவைகளை சந்திக்கும் போது **நம் எண்ணம்** ஆண்டவரை நோக்காமல் நம்மையே நோக்குகிறது.



மாநாட்டிற்கு வந்த கூட்டங்களில் ஆண்கள் பகுதி

இன்று தமிழ் கிறிஸ்தவர்களை கவர்ந்து இழுப்பது **செழிப்பின் உபதேசமாகும்.** செழிப்பின் உபதேசம் எப்படியிருக்கும் என்றால் ஆண்வரே நீர் என்னை இளைப்பாற செய்தீரே உமக்கு ஸ்தோத்திரம். கேதுரு மரத்தால் கட்டப்பட்ட ஒரு வீட்டைத்தந்தீரே உமக்கு ஸ்தோத்திரம். ஆனாலும் **ஆண்டவரே இது எனக்கு போதாதைய்யா,** அடுத்து எனக்கு **தங்கமுலாம்** பூசிய வீட்டைத்தாரும். ஏனென்றால் **நான் ராஜாவின் பிள்ளை.** நான் கேட்பதையெல்லாம் நீர் தருபவர் என்னை **செழிக்கச்** செய்பவர் நீரே என்பதாகும். ஏன் இன்று நமது சபைகளில் மிஷனரி ஊழியத்தின் **தாக்கமும் தரிசனமும்** குறைந்துப்போனது? ஏன் மிஷனரி ஊழியத்திற்கான **தியாகம்** குறைந்து போய்விட்டது? ஏன் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கும் **வாலிபர்களின்** எண்ணிக்கை குறைந்து விட்டது? என்று கேட்டால் அதற்கு பல காரணங்கள் உள்ளன. எனினும் மிக முக்கியமான காரணம் என்னவென்றால் தவறான உபதேசமாகும். அது நம் சபைகளுக்குள் நுழைந்து திருச்சபையை புற்றுநோய்போல்

அழித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய தேவன் நம்மை ஆசிர்வதிக்கிறார். உண்மைதான் ஆதி 12:2-3ல் தேவன் ஆபிரகாமிடம் நான் உன்னை பெரிய ஜாதியாக்கி **உன்னை ஆசிர்வதித்து** உன் பேரை பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் **உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்** என்றார். இன்று நாம் நம் திருச்சபைக்கு, நம் தேசத்திறக்கு ஆசீவாதமாய் இருக்கவேண்டியவர்கள் என்பதை மறந்து போய்விட்டதால் மிஷனரி ஊழியத்தின்மேல் வாஞ்சை குறைந்து போய்விட்டது. எல்லா ஆசீர்வாதமும் எனக்குத்தான் வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த தவறான எண்ணம் எங்கிருந்து வருகிறதென்றால் அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு.

1. ஆண்டவரின் ஆசீர்வாதம் என்பது உலகபிரகாரமான ஆசீர்வாதம் ஆகும்.
2. ஆண்டவரின் ஆசீர்வாதம் என்பது எனக்காக மட்டுமே அருளப்பட்டது என்று நினைப்பதாலேயே செழிப்பை நோக்கி போகிறோம்.

ஆண்டவருடைய ஆசீர்வாதம் என்பது வெறும் **உலகப்பிரகாரமான, சரீரபிரகாரமான ஆசிர்வாதமே** என்று **திருச்சபை** நம்புவதால்தான் இந்த சபையில் **அற்புதம்** கிடைக்காவிட்டால் **அடுத்த சபைக்கு** போவதும். **இந்த போதகரை** விட்டு அந்த **போதகரிடம்** போவதும். இந்த ஊழியர் அவரைவிட வல்லமையுள்ளவர் என்று சொல்லி ஊழியர்களை நாடி ஓடிக்கொண்டிருக்கிறோம். ஆண்டவர் கொடுக்கும் ஆசீர்வாதம் வெறும் உலகம். சரீரம் சம்பந்தப்பட்ட ஆசீர்வாதம் மட்டுமல்ல. ஆண்டவர் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை தருபவர் எனினும் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை சுயநலத்திற்காக பயன்படுத்தக்கூடாது.

தேவன் ஆவிக்குரிய வாழ்வில் நம்மை ஆசீர்வதிக்கிறார். அவருடைய ஆவியின் மூலமாக நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். அவரது **வசனத்தின்** மூலம் நம்மை ஊக்கப்படுத்துகிறார். **ஜெபத்தின்** மூலம் தரிசனத்தைத் தருகிறார். இதையெல்லாம் நாம் ஆசீர்வாதமாக நினைக்கிறதேயில்லை. ஏனென்றால் நமக்கு அவ்வாறு கற்றுக்கொடுக்கப்படவில்லை. ஆண்டவரின் ஆசீர்வாதம் என்னவென்றால் என்பதே இன்றைய கிறிஸ்தவத்தில் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை குறித்து மறந்துபோனோம். அல்லது மறக்க வைத்துவிட்டார்கள். இன்றைய சூழ்நிலையில் வேதத்தை சரியாக கற்றுக்கொடுப்பதற்கு ஆட்கள் இல்லாததினாலே ஆண்டவரே என்னை ஆசீர்வதியும் என் குடும்பத்தை, என் சந்ததியை ஆசீர்வதியும் என்று சுயநலத்தோடு ஜெபிக்கிறோம் ஆண்டவரின்

ஆசிர்வாதம் நமக்கு ஏன் கொடுக்கப்படுகிறது என்றால் ஆசீர்வாதம் நம்மூலம் மற்றவர்களுக்கு கடந்து செல்லவேண்டும். **மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் வாழ வேண்டும்** என்பதற்காகவே **தாவீதை** தேவன் ஆசீர்வதித்தார். இப்போது தாவீது தனக்கு இன்னும் ஒரு பெரிய வீட்டை கட்டவேண்டும் என்று எண்ணவில்லை. மாறாக தேவனின் உடன்படிக்கையின் பெட்டி கூடாரத்தில் இருக்கிறதே. தேவனின் நாம மகிமைக்காக ஒரு **ஆலயம் கட்டப்படவில்லையே** என்று எண்ணுகிறார். இப்படி தேவனை நோக்கியே அவரது எண்ணம் செல்கிறது. தேவன் நம்மை ஆசீர்வதிக்கும் போது நாம் தேவையுள்ள மற்றவர்களை நோக்கிப் பார்க்கவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இயேசுவை மையப்படுத்தி சுயத்தை ஒடுக்கி மற்றவர் களுக்காக வாழ்வதே. அப்படி வாழ்வதில் மெய்யான சந்தோஷம் இருக்கும். ஆண்டவர் தாவீதை ஆசீர்வதித்தபோது ஆண்டவருக்கு ஒரு வீட்டைக் கட்டவேண்டும் என்று அவர் மனம் பாரப்படுகிறது. இன்று தேவனுடைய ராஜ்யத்தை குறித்த பாரம் நமக்கு உண்டா என்று தேவன் பார்க்கிறார். நம் தேவனைக் குறித்து **ஒருமுறை கூட கேள்விப்படாத ஜனங்கள்** நம் தேசத்தில் உண்டே!. இயேசு கிறிஸ்து தன் இறுதிக் கட்டளையாக மத்தேயு 28:19ல் **உலகெங்கும்போய் சர்வ சிருஷ்டிகட்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்** என்றார். அதற்குமுன் வசனம் 18ல் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, எனவே புறப்பட்டு போங்கள் என்கிறார். அந்த அதிகரத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். சாதாரண மனிதர்களுக்கு சேவை செய்ய தேவன் நம்மை அழைக்கவில்லை. இன்று திருச்சபையில் **ஆத்தும பாரமும் அருட்பணியில் வேகம் குறைந்துகொண்டே போகிறது. தொலைகாட்சியில்** 24 மணிநேரமும் ஒளிப்பரப்பக்கூடிய **கிறிஸ்தவ நிகழ்ச்சிகளில்** அருட்பணியின் செய்தி **கொடுக்கப்பட்டிருக்கிறா?** நம்முடைய **சுகத்திற்காக ஆசிர்வாதத்தின் செய்தி மட்டும்தானே ஒலிப்பரப்படுகிறது.** கிறிஸ்தவம் எங்கே சென்றுகொண்டிருக்கிறது.? நம்முடைய **திருச்சபைக்குள்ளும்** எழுப்புதலைகொண்டு வரும்படி தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் சாதாரணமானவர்கள் தான். ஆனால் **தேசத்தை அசைக்கும்படியாய்** சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாய் **ராஜாதி ராஜாவுக்கும்** சேவைசெய்யும்படியாய் **நம்மை அழைத்திருக்கிறார்.**

நான் அமெரிக்காவில் **கெண்டக்கி** நாட்டில் **இறையியல்** படித்து கொண்டிருக்கும்போது எப்போது என் படிப்பு முடியும்? நான் சீக்கிரம் சென்று ஆண்டவரைக் குறித்து **பிரசங்கிக்க**

**வேண்டும். ஆத்தும ஆதாயம்** செய்ய வேண்டும். ஆத்தும அதாயம் செய்ய வேண்டும் என்று துடித்தேன். எனக்கு பிடித்த மிருகம் குதுரை. நான் **கென்டக்கி** நாட்டில் **குதிரைகளை** காணும்போது என்னை ஒரு கருப்பு குதிரையாக கற்பனை செய்துகொண்டு ஆண்டவருக்காக எதையாகிலும் செய்யனும் சாதிக்கனும் என்று சொல்லி ஆசைப்பட்டேன். ஆனால் என் **கழுத்தில் ஒரு கயிர் கட்டப்பட்டு இருந்தது**. அதை என்னுடைய சுய முயற்சியிலே **அறுத்துவிட்டு** ஓடவேண்டும் என்று எண்ணினேன். ஒரு குருத்தோலை ஞாயிறு ஆராதனையில் வாசித்த வேத பகுதியல் இயேசு சீஷரிடம் அந்த **கழுதையின் கயிற்றை அவிழ்த்துவிடுங்கள்** என்று கூறுகிறார். அப்போது ஆண்டவர் என்னிடம் கூறும்போது, நான் என்னுடைய **நேரம் வரும்போது** தான் உன்னுடைய **கயிற்றை அவிழ்ப்பேன்.** நீ ஒரு பராக்கிரமுமான குதிரை என்று நினைக்கவேண்டாம். **நீ என்னை சுமந்து செல்லும் ஒரு சாதாரண கழுதையாகத்தான் இருக்க வேண்டும்** என்று நான் விரும்புகிறேன்.

அந்த கழுதை இயேசுவை சுமந்து செல்லும்போது ஜனங்கள் வழியெங்கும் அதற்கு தங்கள் வஸ்திரங்களை விரித்தார்கள். குருத்தோலைகளை வழியிலே பரப்பி ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். ஆண்டவர் என்னிடம் **நீ என்னை சுமந்து செல்லும் கழுதை** மக்கள் குருத்தோலைகளை அசைத்து ஓசன்னா என்று சொல்லும் போதும் **கம்பளங்களை விரிக்கும்** போதும் **அது உனக்காக** விரிக்கப்படுவதல்ல. **அது எனக்காக** விரிக்கப்படுவது என்றார். இன்று அநேக ஊழியர்கள் திசைமாறி போனதற்கு காரணம் இதை சரியாக புரிந்து கொள்ளாததால்தான். ஆண்டவர் அந்த கழுதையை விட்டு இறங்கிவிட்டால் அதற்கு மதிப்பே இல்லை. அவருடைய சுவிஷேத்தை சொல்லும்படியாக இந்த தேசத்தில் அவரை சுமந்துசெல்லும்படியான வாய்பபை கர்த்தர் நமக்கு கொடுத்துள்ளால். தாவீது தன்னை தாழ்த்தி ஆண்டவரே என் தேசத்தில் ஒரு கழுதையைப் போல நான் உம்மை சுமந்துசெல்லவும், உம் சுவிசேஷத்தை அறிவிக்கவும் என்னை ஒப்புக்கொடுக்கிறேன் சுவாமி என்று சொல்லுவோம். ஆபிரகாமை கொண்டுதம் தேசங்களை ஆசீர்வதிருக்க தேவன் இன்று நம்மைகொண்டும் தேசங்களை ஆசிர்வதிக்க விரும்புகிறார். சுயத்திற்காக வாழாமல் தேவனுக்காய் வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

Dr. **V.C.T. பிரபுசிங்**
Principal
**SAIACS பெங்களூர்**



Pastor Sam Sundaram
A.C.A CHRUCH

# ஊழியத்திற்கு வரும் தடைகள்

**1. சரீர வியாதியாக வரும் தடை**

நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், **உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும்** கொஞ்சம் **திராட்ச ரசமும்** கூட்டிக்கொள் (1தீமோ. 5:23)

ஊழியஞ்செய்யக்கூடாமல் வருகிற **முதல் தடை** நமது **சரீரத்தில் ஏற்படும் வியாதியே**. சரீர வியாதிகள் ஊழியஞ்செய்ய நம்மை முற்றும் தடை செய்யாதிருக்கலாம். ஆனாலும் அவை அவ்வப்போது நிறைவேற்ற வேண்டிய ஊழியங்களை நாம் விரும்புவதுபோன்று நிறைவேற்ற இடமளியாது தடை செய்யும்.

**தீமோத்தேயு** ஒரு நல்ல **தேவ ஊழியன்** பவுல் அப்போஸ்தலனுக்கு **ஆவிக்குரிய** ஒரு **நல்ல மகன்**. சரீர சுகவீனத்தின்நிமித்தம் அவன் தனது ஊழியத்தைச் செவ்வையாய் நிறைவேற்ற முடியாது காணப்பட்டதாகப் பவுல் அப்பே பாஸ்தலன் குறிப்பிடுகிறார்.

உன் **வயிற்றிற்காகவும்** உனக்கு நேரிடுகிற **பலவீனங்களுக்காகவும்** என்ற சொற்றொடர் இதனைத் தெளிவுபடுத்துகிறதல்லவா ? அநேகருக்கும் இன்று வயிற்றில்தான் பிரச்சனை, வயிற்றுப் பகுதியில் தான் கல்லீரல், மண்ணீரல், கணையம் இரைப்பை, சிறுகுடல் பெருங்குடல் சிறுநீரகம் போன்ற உறுப்புகள் அமைந்துள்ளன.

**வயிற்றுப் பகுதியிலுள்ள** உறுப்புகளில் சிலருக்கு **கல், கட்டி** ஏற்படுகின்றன. சிலர் **குடல் புண்ணினால்** அவதிப்படுகின்றர். இங்ஙனம் பல வியாதிகள் வயிற்றுப் பகுதியைத் தாக்குகின்றன. அடிக்கடி ஏற்படும் இவ்வித பலவீனங்கள் நாம் நிறைவேற்ற வேண்டிய ஊழியங்களைச் செயல்படவிடாது தடை செய்யும். பவுல் அப்போஸ்தலனும் இதற்கு விலக்கல்ல.

பவுல் இப்படி எழுதுகிறார், உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நான் **சரீர பலவீனத்தோடு** முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்.

அப்படியிருந்தும் **என் சரீரத்தில்** உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் **அசட்டை பண்ணாமலும், அரோசியாமலும், தேவ தூதனைப்** போலவும் **கிறிஸ்து இயேசுவைப்**போலவும் என்னை ஏற்றுக்கொண்டீர்கள். (கலாத்தியர் 4:13,14)

பவுலின் சுகவீனத்தை இங்குக் காண்கிறோம். ஆம் சரீர சுகவீனம் ஊழியத்துக்கு தடையை உண்டாக்கும்.

அல்லாமலும் **நான் பலவீனத்தோடு** பயத்தோடும் **நடுக்கத்தோடும்** உங்களிடத்தில் இருந்தேன் என்று 1 கொரிந்திரயர் 2:3லும் பவுல் கூறியுள்ளார். இன்னும் **பல தேவனுயை ஊழியர்களும்** வியாதியின் **வேதனையோடு** ஊழியஞ்செய்ததை வேதத்தில் காணலாம்.

அவன் **வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது** மெய்தான். ஆகிலும் தேவன் அவனுக்கு இரங்கினார். அவனுக்கு இரங்கினதுமல்லாமல் துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகதபடிக்கு எனக்கும் இறங்கினார். (பிலிப்பியர் 2:27)

இங்கு **எப்பாப்பிரோதீத்துவைக்** குறித்துச் சொல்லப்பட்டுள்ளது காண்க. ஆம் தேவனுடைய ஊழியர் பலர் பலவீனப்பட்டுக் காணப்பட்டனர். மரணத்துக்குச் சமீபமாயிருந்தனர். வியாதியின் **நிமித்தமாய் ஊழியரை நியாயந்தீர்ப்பது தவறு** . தேவனுடைய ஊழியரது பாதை இவ்விதம் அமைவது இயல்பே.

பவுல் அப்போஸ்தலன் 64 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார் என்றோர் புத்தகம் கூறுகிறது. அவர் **தமது பலவீனத்தோடு** தேவனுக்கு மாபெரும் ஊழியத்தைச் செய்த ஒரு தேவ மனிதர். **பல்வேறு வரங்களைப் பெற்றவர்**. அவர் மரித்தோரையும் உயிரோடு எழும்பியிருக்கப்கூடும். தமது ஊழியத்தில் அற்புதங்களின்மேல் அற்புதங்களைக் கண்டவரும் கூட. அப்படிப்பட்ட ஊழியர் **வியாதிப்படிருந்ததததை வேதத்தில்** காண்கிறோம்.

எலிசாவைப் பற்றி வேதம் என்ன கூறுகிறது? **எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்** (2 இராஜா 13:14) **எலிசாவுக்கு வியாதி வரலாமா?** அவரும் எத்துனை அற்புதங்களைச் செய்தவர். அதிலும் மரணத்துக்கு ஏதுவான வியாதி என்று குறிப்பிடப் பட்டுள்ளது. காண்க **பழைய** ஏற்பாட்டின் ஊழியரும், **புதிய** ஏற்பாட்டின் ஊழியரும் வியாதிப்படுவது இயல்புதான் என்பதை இதனால் அறியலாம். தேவ ஊழியரை ஊழியஞ்செய்யவிடாது தடுப்பதற்காகவே **பிசாசு வியாதியைச் சரீரத்தில் கொடுக்கிறான்**. வியாதியின் நேரத்தில் ஊழியராகிய நீங்கள் சோர்ந்துபோகக்கூடாது. **வியாதியை மேற்கொள்ளக்கூடிய வேத வாக்கியங்களைப்** பற்றிப்பிடித்து ஜெயங்கொள்ள வேண்டும்.

என் மாம்சத்திலே **ஒரு முள்** கொடுக்கப்பட்டிருக்கிறது. (2 கொரி 12:7) என்று பவுலடியார் கூறுகின்றார். **அம்முள்** அவரது ஆவியிலோ, ஆத்துமாவிலோ அமையவில்லை. **சரீரத்தில்தான் உண்டானது**, ஆயின் அவர் அதனை மேற்கொள்ள கர்த்தரது வாக்குகளைப் பற்றிப் பிடித்தார். **என் கிருபை உனக்குப் போதும்**. பலவீனத்திலே **என் பலன் பூரணமாய் விளங்கும்.** அந்தப்படியே நான் **பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்.** என்றார்.

பிரியமானவர்களே! வியாதி வந்ததும் ஒரு மூலையில் சென்று அமர்ந்து அழுது புலம்பாதிருங்கள். **என்னைச் சீக்கிரமாய் எடுத்துக்கொள்ளும்** எனது ஊழியம் முடிந்துவிட்டது என்று கூறாதிருங்கள். **மாம்சம் பெலவீனமுள்ளதுதான் ஆவியோ** உற்சாகமுள்ளது.

**பெலவீனனும்** தன்னைப் **பலவான் என்று சொல்வானாக** (யோவேல் 3:10) உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு **பலத்தைக் கட்டளையிட்டார்**. (சங். 68:28) போன்ற வாக்குத்ததங்களை அறிக்கையிட்டு உங்களது ஊழியத்தை நிறைவேற்றுங்கள்.

என் மகனே! என் மகளே! வியாதி உன்னைத் தாக்கினாலும் கவலைப்படாதே. என்னுடைய வாக்குத்ததங்களை அறிக்கையிட்டு வியாதி நீங்கிச் சுகதேகியாக வாழுவாயாக. என்று கர்த்தர் உங்களைப் பார்த்துக் கூறுகிறார். தேவன் உங்களுக்குப் போதுமான கிருபையைத் தந்தருளுவார். வியாதியை மேற்கொண்டு உங்களது ஊழியத்தை நிறைவேற்றுங்கள்.

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம் (1 கொரி 3:16,17)

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும். நீங்கள் உங்களுடையவர்கல்ல வென்றும் அறியீர்களா? (1 கொரி 6:19)

இவ்வசவனங்களை அத்துமாவின் பரிசுத்தத்தைக் குறித்தப் பொருளிலே பலர் தான் பிரசங்கிப்பர். கர்த்தரோ **உங்கள் சரீரம்** தேவனுடைய ஆலயம் என்று கூறுகிறார். ஆகையால் நீங்கள் உங்களது **சரீரமாகிய** தேவனுடைய ஆலயத்தைக் கண்ணுங்கருத்துமாய் **வியாதி தாக்காதவாறு** காத்துக்கொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகும். இந்த விளக்கத்தைக் குறித்த புத்தகத்தையும் நான் வாசித்துள்ளேன்.

**சரி விகித உணவை உண்டு.** சரியான **சீதோஷண நிலையில்** வாழ்ந்து உங்களது சரீரத்தை காத்துக்கொள்வது மிக இன்றியமையாதது. சிலர் **எல்லாவற்றையும் சாப்பிடுவார்கள்.** கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று கண்டபடி பெருந்தீனியாக உணவைச் சாப்பிட்டு, தேவனுடைய ஆலயமாகிய சரீரத்தைத் நாம் **கெடுத்துக்கொள்வதைத்** தேவன் விரும்புவதில்லை. அங்ஙனம் கட்டுபாடின்றி உயவை நீங்கள் சாப்பிடுவார்களேயானால் உங்களது வாழ்வின் கடைசி நாட்களில் **சர்க்கரை** வியாதி **இருதய** வியாதி **இரத்தக்கொதிப்பு** வியாதி போன்றவைகளினால் பாதிக்கப்படுவீர்கள். இது **தேவ செய்தியா,** அன்றி **மருத்துவ வகுப்பா?** என்று ஐயப்படவேண்டாம். **எல்லா உணவு வகைகளும்** கர்த்தரால் கொடுக்கப்பட்டவைகளே என்றெண்ணி, **எந்த நேரத்திலும்** எல்லா உணவுகளையும் **சாப்பிடுவது ஏற்புடையதல்ல**. உங்களது ஆவிக்குரிய ஊழியத்தை நன்முறையில் தடையின்று நிறைவேற்றவும் **உணவுக் கட்டுப்பாட்டினைக்** கடைபிடித்தொழுகுவீர்களாக. பிசாசு உங்களது **வரங்களையும்** தடை செய்ய **வியாதியை** உங்களது சரீரத்தில் உண்டாக்காவண்ணம் எச்சரிப்போடு வாழ்ந்து உங்களது ஊழியத்தை நிறைவேற்றுங்கள்.

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

**JUNE - 2024**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.